[23rd February 1955

THE HON. SRI C. SUBRAMANIAM :—" I have already said that I do not know that case. If a separate question is put, I shall answer it."

SRI S. R. ARUMUGAM :—" டிரெயினிங்குக்கு எடுத்து கால் வருஷ, அரை வருஷப் பரிட்சையில் பாஸ் மார்க் வாங்காமல் இருந்தால் அவர்களுக்கு அரசாங்கம் சாங்க்ஷன் செய்த ஸ்டைபெண்டை வருஷ மத்தியில் நிறுத்திவிடுகிறார்கள். அப்படி நிறுத்துவதால் அவர்களுடைய வாழ்க்கை பாதிக்கப்படுகிறது. கால், அரை வருஷ பரிட்சையில் கம்மியாக மார்க் வாங்கியிருந்தாலும், முதல் வருஷம் பாஸ் செய்யாவிட்டாலும் அடுத்த வருஷத்தில் நிச்சயம் அவர்கள் பாஸ் செய்துவிடுவார்கள். அதனால் இப்பொழுது இருக்கும் சட்டத்தை மாற்றுவதற்கு சர்க்கார் யோசிக்குமா ?"

THE HON. SRI C. SUBRAMANIAM :—" பாஸ் பண்ணுவதும் பண்ணாததும் பரீட்சையைப் பொருத்தது மட்டும் அல்ல. மாணவர்கள் ஆசிரியர்களாக இருக்க தகுதியுள்ளவர்களாக இருக்கிறார்களா அல்லது தகுதியற்றவர்களாக இருக்கிறார்களா என்றுதான் பார்க்கப் படுகிறது. பரீட்சையைப் பொருத்து மட்டும் அல்ல. ஆகவே இப்பொழுது இருக்கும் விதியே சரியானது, என்பதை கனம் அங்கத்தினருக்கு எடுத்துக் கூறுகிறேன்."

MR. SPEAKER :—" We have got only half hour more and we have got a large number of questions still to cover. I now pass on to the next question."

*Bauxite and iron ores in Salem*

* 853 *Q*.—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the measures proposed to be taken by the Government to exploit bauxite and iron ore in Salem?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" The Planning Commission has already been addressed for an expert study of the development of Salem iron ores and Shevaroy Bauxite deposits and to include schemes for their exploitation in the Second Five-Year Plan of the Government of India."

SRI N. K. PALANISAMY :—" இரண்டு வருஷங்களுக்கு முன்பு டால்மியா அவர்கள் அலுமினியம் பாக்டரி அமைப்பதற்கு சர்க்காரை லைசென்ஸ் வேண்டும் என்று கேட்டார். அப்படிக் கேட்கப்பட்டிருந்தும் இன்னும் அங்கு அலுமினியம் பாக்டரி ஏற்படவில்லை. காரணம் என்ன ? சர்க்கார் லைசென்ஸ் கொடுக்க மறுத்துவிட்டார்களா அல்லது அவர்களே அந்த பாக்டரியை ஏற்படுத்த வில்லையா ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" இரண்டு வருஷங்கள் அல்ல. அதற்கு முன்பே கேட்கப்பட்டது. அப்பொழுது ஓரளவு பரிசீலனை செய்யப்பட்டது. அப்பொழுது அரசாங்கத்தினிடம் போதுமான மின்சாரம் இல்லாத காரணத்தால் அதைத் தொடர்ந்து பரிசீலனை செய்வதாக இல்லை என்று விட்டு விட்டார்கள். '

9 a.m. SRI M. P. SUBRAMANYAM :—" தென்னார்க்காட்டில் நெய்வேலியிலிருக்கும் நிலக்கரியை எடுப்பது வெற்றியளிக்குமா அளிக்காதா என்று தெரிந்து கொள்வதற்கு குறைந்தது 7, 8 வருஷங்கள் அரசாங்கம் செலவு செய்திருக்கிறது, இப்பொழுது சேலத்தில் இருக்கும் இரும்புக் கனியை வெற்றிகரமாக எடுக்கமுடியுமா முடியாதா என்பதற்கு அரசாங்கம் ஏன் ஒருவிதமான முயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை ? நெய்வேலி

23rd February 1955]

பழுப்பு நிலக்கரி வெற்றியளிக்காவிட்டாலும் மேட்டூர் மின்சாரத்தை வைத்து அந்த இரும்புக்கனியை எடுக்க தொழிற்சாலையை அமைக்க சர்க்கார் திட்டம் அமைப்பார்களா ? ''

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—'' சேலத்திலுள்ள இரும்பை எடுப்பதற்கு நெய்வேலியிலுள்ள பழுப்பு நிலக்கரி அதிகமாகத் தேவைப்படுகிறது. ஆகையால்தான் இந்த பழுப்பு நிலக்கரி எவ்வளவு கிடைக்கும் என்பதைத் தெரிந்துக்கொண்டே சேலத்தில் இரும்புத் தொழிற்சாலையை எவ்வாறு ஏற்படுததலாம் என்கிற விஷயம் எடுத்துக்கொள்ளப்படும்.''

SRI S. DAIVASIGAMONEY :—'' Sir, was there a survey of Salem area for bauxite and iron and whether as a result of the survey, sufficient bauxite and iron are found, enough for commercial purposes; May I know when a proposal was sent to the Union Government, this proposal was sabotaged for the purpose of giving preference to iron industry in the North? ''

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—'' There is no question of sabotaging by anybody. There has been a geological survey and it is estimated that there is very good quality of bauxite available in Salem and also Salem iron ores can be exploited. But the Government of India have told us that we cannot take up the scheme for examination till we know definitely what is to be the scheme that will be taken up under the Neiveli Lignite Project.''

SRI S. PANCHAKSHARAM :—'' Sir, we have in South Arcot enough of coal and in the neighbouring district of Salem we have got iron ore. People say that Salem is a very good venue for the establishment of a steel plant. Some time ago, we read in the newspapers that the Russian experts expressed the view that Salem was a very good place for starting a steel plant, but the Hon. the Minister for Commerce in the Government of India said when he visited Madras last that it was a mirage. What is the view of this Government on that question and have the Government considered the problem and come to a conclusion that Salem is a good place for starting a steel plant? ''

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—'' I do not know what the Russian experts said about the possibilities in Salem. Sir, regular iron ore or steel is one thing and pig iron is quite a different thing. We cannot take up any scheme till we know the possibilities of the Lignite Project in Neiveli.''

SRI M. KALYANASUNDARAM :—'' மத்திய அரசாங்க மந்திரிகள் சொல்வதைப் பார்த்தால் இந்தத் திட்டம் ஒப்புக்கொள்ளக் கூடியதாகவே தெரியவில்லை. ஆனல் நம்முடைய அரசாங்கத்தார் இதை மத்திய அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்திருக்கிறதாகச் சொல்லுகிருர்கள். ஆகவே இது இரண்டாவது ஐந்து வருஷத்திட்டத்திலாவது சேர்க்கப்படுமென்கிற உத்திரவாதத்தை இந்தச் சர்க்கார் கொடுக்க முடியுமா என்று கேட்கிறேன்.''

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—'' I have already stated, Sir, that we have been told by the Government of India that this would be taken up when the possibilities of the Lignite Project are known.''